# ஐ.வி.டி.பி. மலர்

மொட்டு-12
ஆகஸ்டு to நவம்பர் 2019
மலர் 35

## மகளிர் சுய உதவிக்குழு புத்துணர்வு இதழ்



₹ 5.75 இலட்சம்

தருமபுரி தொன்போஸ்கோ
கலைக் கல்லூரியில் பயிலும்
93 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட
கல்வி உதவித் தொகை

40
INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
1979 IVDP 2019
TOWARDS TRANSFORMATION - மாற்றத்தை நோக்கி

# நிறுவனர் இதயத்திலிருந்து



*அன்பு உள்ளங்களே!*

உங்கள்
அனைவருக்கும்
எனது அன்பு

## கிறிஸ்துமஸ்,
## புத்தாண்டு,
## பொங்கல்

நல்வாழ்த்துக்களும்
வணக்கங்களும்



நீண்ட நாட்களாக காத்திருந்து இப்போது வந்துவிட்டது உள்ளாட்சி தேர்தல்கள். நெருங்கி வந்திருக்கும் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தல்களில் சிந்தித்து வாக்களியுங்கள். வெற்று வாக்குறுதிகளுக்கும், சில நூறு ரூபாய்களுக்கும் விலை போய் விடாதீர்கள்.

**நீங்கள் அளிக்கும் வாக்கு உங்கள் தலைவிதியையே மாற்றும் வல்லமை படைத்தது என்பதை மறவாதீர்கள். தவறாமல் வாக்களியுங்கள் உள்ளாட்சியில் நல்லாட்சி மலர உங்கள் வாக்கை செலுத்துங்கள்.**

**மழை நீரை சேமிப்பீர்!**

குழுவின் செயல்பாடுகளில் முழுமையாக ஈடுபாடு காட்டுங்கள். கடந்த காலங்களில் நடைபெற்ற ஒரு சில தவறுகள் கூட மீண்டும் நடைபெறா வண்ணம் உங்கள் செயல்பாடு இருக்க வேண்டும். இவ்வாறு பணியில் நேர்மை, ஒற்றுமையுணர்வு, வெளிப்படைத்தன்மை, மற்றவர் நலனில் அக்கறை போன்ற பண்புகளை கொண்டு செயல்படுவோம். அப்போதுதான் நமது குடும்பமும், குழுவும் சிறந்து விளங்கும்.






**எனவே பிறக்கவிருக்கும் புத்தாண்டு 2020 நம் வாழ்வில் ஏற்றம் தரும் ஆண்டாக இருக்குமென நம்புவோம்.**

இணைந்து
உழைப்போம்,
இணைந்து
முன்னேறுவோம்.

இப்படிக்கு,
என்றும் மக்கள் பணியில்

**குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர்/தலைவர்

**தலை கவசம்! உயிர் கவசம்!! ஹெல்மட் அணிவீர்...**

## ஐ.வி.டி.பி. பணியாளர் குழந்தைகளுக்கு

# கல்வி உதவித் தொகை

₹ 11 இலட்சம்



5 ஆண்டுகள் தொடர்ந்து ஐ.வி.டி.பி நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களின் குழந்தைகள் அனைவருக்கும் (முதல் வகுப்பு முதல் கல்லூரிக் கல்வி வரை) அவர்களின் படிப்பிற்கு தக்கவாறு உதவித்தொகை வழங்கப்படுகிறது. **அவர்களுள் 10ஆம் வகுப்பில் முதலிடம் பெறும் மாணவர்க்கு 4 கிராம் தங்க நாணயமும், 12ஆம் வகுப்பில் முதல் இடம் பெறும் மாணவர்க்கு ரூ. 30,000 மதிப்பிலான மடிக்கணினியும் பரிசாக வழங்கப்படுகிறது.**

இவ்வாண்டு இத்திட்டத்தின் கீழ் 99 பணியாளர்களின் 165 குழந்தைகளுக்கு **ரூ. 11 இலட்சம்** கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

**கடந்த 2011 ஆம் ஆண்டில் துவங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் இதுவரை ரூ. 1 கோடி வழங்கப்பட்டுள்ளது.**

# கோட்டையூர் ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி மாணவர்களுக்கு கல்வி உதவி

₹ 1.3 இலட்சம்

ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி மாணவர்களின் வளர்ச்சிக்காக இந்த ஆண்டு சீருடைகளும், தேர்வு அட்டையும் ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டது. **இவற்றின் மதிப்பு ரூ. 1.3 இலட்சமாகும்.**

**இதுவரை இப்பள்ளி மாணவர்களின் நலனுக்காக ஐ.வி.டி.பி மூலம் ரூ. 25.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.**



**மஞ்சளின் மருத்துவ பலன்கள்**

மஞ்சள் ரத்தத்தை சுத்தம் செய்து உங்கள் சக்திக்கு ஒரு தெளிவான தன்மை அளிக்கிறது.

இதில் வைரஸ் எதிர்ப்பு மற்றும் பாக்டீரியாக்களை எதிரிக்கும் தன்மை அதிகம் இருப்பதால் சளி, இருமல் தீரும்.

சளி தொந்தரவால் அவதிப்படுபவர்கள், தினமும் காலையில் மூக்கடைப்பால் சிரமப்படுபவர்கள், வேப்பிலை, தேன், மஞ்சள், மிளகு இவற்றை உட்கொள்வதன் மூலம் பெரிதும் பலன் பெறலாம்.

# வெற்றி நம் கையில்


11 மற்றும் 12 ஆம் வகுப்பு தெலுங்கு வழி பயிலும் மாணவர்களுக்கான

## இலவச வினாவிடை கையேடு

₹ 2 இலட்சம்




"வெற்றி நம் கையில்" கையேடு வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் உயர்திரு. S. பிரபாகர், இ.ஆ.ப. அவர்கள்




கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தெலுங்கு வழியில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்காக ஐ.வி.டி.பி மூலம் **"வெற்றி நம் கையில்"** வினாவிடை கையேடு தயாரிக்கப்பட்டு 05.11.2019 அன்று ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

**இதுவரை "வெற்றி நம் கையில்" வினாவிடை கையேடு தயாரிக்கும் பணிக்காக ஐ.வி.டி.பி. ரூ. 4.12 கோடி வழங்கியுள்ளது.**

# ஓசூர், ஜான்போஸ்கோ மகளிர் பள்ளிக்கு

## ரூ. 2 இலட்சம் மதிப்பிலான ஊக்கப்பரிசுகள்

ஓசூர், ஜான்போஸ்கோ மகளிர் பள்ளியில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம் பெற்ற 3 மாணவிகளை பாராட்டி ஐ.வி.டி.பி மூலம் தலா ரூ. 3,300 மதிப்பிலான 3 தங்க நாணயங்கள் பரிசாக வழங்கப்பட்டன. மேலும் ஆசிரியர் தின விழாவின் போது ஆசிரியர்களுக்கு ரூ.80 ஆயிரம் மதிப்பிலான Fastrack பைகள் வழங்கப்பட்டன.




மேலும் கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவிகளின் கலைநிகழ்ச்சிக்கான சீருடை செலவு ரூ.97 ஆயிரம் ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டது. **இதுவரை இப்பள்ளிக்கு ஐ.வி.டி.பி. மூலம் பல்வேறு கல்வி பணிகளுக்காக ரூ. 16.45 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.**

# கிருஷ்ணகிரி ஜிப்ஸி குழந்தைகள் இல்ல மாணவர்களுக்கு

## ரூ.34 ஆயிரம் மதிப்பிலான LED TV

கிருஷ்ணகிரியில் ஜிப்ஸி குழந்தைகள் இல்லம் செயல்பட்டு வருகிறது. குடும்ப சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இந்த இல்லத்தில் தங்கி கல்வி பயின்று வருகின்றனர். இந்த மாணவர்களுக்கு **ரூ. 34 ஆயிரம்** மதிப்பிலான LED TV ஐ.வி.டி.பி மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டது. **இதுவரை பல்வேறு குழந்தைகள் இல்லங்களுக்கு ரூ. 10 இலட்சம் மதிப்பிலான LED TV க்கள் வழங்கப்பட்டுள்ளது.**



₹2.5 இலட்சம்

# கிருஷ்ணகிரி அரசு பெண்கள் கலைக்கல்லூரி மாணவிகளுக்கு ரூ.2.5 இலட்சம் மதிப்பிலான பல்வேறு வகையான திறன் வளர்ப்பு பயிற்சிகள்



போட்டோகிராபி



அழகு கலைப் பயிற்சி



தையல் பயிற்சி

**இவ்வாண்டு கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரியில் பயிலும் 515 மாணவிகளுக்கு தையல் பயிற்சி, கணினி பயிற்சி, மெகந்தி பயிற்சி, கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, போட்டோகிராபி மற்றும் அழகு கலைப் பயிற்சி ஆகிய பயிற்சிகளை வழங்கும் பொருட்டு ஐ.வி.டி.பி மூலம் ரூ.2 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.**

**மேலும் ரூ. 57,000 மதிப்பிலான 10 தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.**

**இதுவரை இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக ஐ.வி.டி.பி. ரூ. 64 இலட்சம் மதிப்பிலான பணிகளை செய்துள்ளது.**



## கஜா புயலால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம், ரகுநாதபுரம்

# அக்சீலியம் கல்லூரி மாணவிகளுக்கு

## ரூ.2 இலட்சம் மதிப்பிலான தொழில் திறன் பயிற்சிகள்

₹ 2 இலட்சம்

அக்சீலியம் கல்லூரி மாணவிகள் சுயதொழில் புரிய ஏதுவான வகையில் தையல், அழகுக்கலை, கணினி பயிற்சி போன்ற பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்து பயிற்சி கட்டணத்தில் சரி பாதியை மாணவிகளும், அதற்கு நிகரான தொகையான **ரூ. 2 இலட்சத்தை** ஐ.வி.டி.பி. நிறுவனமும் வழங்கியது. இந்தப் பயிற்சிகளில் இக்கல்லூரியில் பயிலும் 196 மாணவிகள் பயன்பெற்றனர்.

**இக்கல்லூரி மாணவிகளின் நலனுக்காக கஜா புயலின்போதும் தற்போதும் ரூ. 27 இலட்சம் மதிப்பில் பல்வேறு பணிகள் ஐ.வி.டி.பி. மூலம் செயல்படுத்தப்பட்டு உள்ளன.**



கஜா புயலால் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர்
தோன்போஸ்கோ இளைஞர் கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு

## ரூ.2.25 இலட்சம் மதிப்பிலான

# மிதிவண்டிகள்

₹ 2.25 இலட்சம்




தொன்போஸ்கோ இளைஞர் கிராமத்தை சுற்றியுள்ள மாணவர்கள் பள்ளிக்கு செல்ல ஏதுவாக ரூ. 2.25 இலட்சம் மதிப்பிலான 50 மிதிவண்டிகள் வழங்கப்பட்டன.

### மூலிகை ஃபேஷியல்

முல்தானிமட்டி, பயத்தமாவு, கடலைமாவு, கஸ்தூரி மஞ்சள், சந்தனத் தூள் இவற்றை சிறிது எடுத்து தேய்காய்ப் பால் விட்டு கலந்து முகத்துக்கு பேக் போடுங்கள். இருபது நிமிடங்கள் கழித்து வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவுங்கள். பிறகு கற்றாழை ஜெல்லில் ஒரு சொட்டு எலுமிச்சைச் சாறுவிட்டுக் கலந்து முகத்தில் பூசிக் கழுவுங்கள். இப்படி தினமும் செய்து கொள்ளலாம். குளிர்கால பாதிப்பிலிருந்து முகத்தை பாதுகாக்கும் சத்தனத்தூள் முகத்தில் இருக்கும் அழுக்கை போக்கும். கஸ்தூரி மஞ்சள், முல்தானிமட்டி முகத்தை பொலிவாக்கும் தேங்காய்ப் பால் சேர்ப்பதால் சருமத்தின் மிருதுத் தன்மை கூடும். முகத்தில் பருக்கள் இருந்தால், கொஞ்சம் வேப்பந்தளிரை அரைத்துச் சேர்த்து பேக் போடலாம்.


அடுத்தவரோடு ஒப்பிட்டு உன்னை நீயே தாழ்த்திக்கொள்ளாதே உலகத்தில் பெஸ்ட் உனக்கு நீயே...



## குழந்தைகள் தின விழாவில் புனித அன்னாள் பள்ளி மாணவிகளுக்கு ரூ.3.5 இலட்சம் மதிப்பிலான

# வாட்டர் பாட்டில்கள்

₹ 3.5 இலட்சம்

குழந்தைகள் தினவிழாவை சிறப்பிக்கும் வகையில் கிருஷ்ணகிரி புனித அன்னாள் பள்ளி மாணவிகளுக்கு 2200 வாட்டர் பாட்டில்கள் ரூ.3.5 இலட்சம் மதிப்பில் நன்கொடையாக வழங்கப்பட்டது. **இதுவரை புனித அன்னாள் பள்ளியின் வளர்ச்சிக்காக ஐ.வி.டி.பி.ரூ.37.5 இலட்சம் மதிப்பிலான உதவிகளை வழங்கியுள்ளது.**

## கவிதை

மறந்துவிடாதே, சங்கத்தை மறந்துவிடாதே,
மருவத்தூர் அரசி சங்கத்தை மறந்து விடாதே.
காசேதான் கடவுளடா பெயரும் உண்டு,
காசுக்காக பல தொழிலும் புரிவதுண்டு,
ஒற்றுமையாய் இருந்து வந்தால் சங்கம் வளருது,
கணக்கு சரியா இருந்து வந்தால் காசு வளருது,
வட்டி குறைவா இருப்பதுதான் ஐ.வி.டி.பி சங்கம்,
எடுப்பவர்தான் கட்டாவிட்டால் நம் மனதில் பங்கம்
சங்கத்தில் சேர்ந்ததினால் அறிவு வளருது,
அதை பகுத்தறிவாய் நடத்திவந்தால் பெருமை கிடைக்குது.



மங்கம்மாள்,
மருவத்தூர் அரசி மகளிர் மன்றம்,
ஜெகதாப், பையூர்

### பெற்றோர் இருவரையும் இழந்த

## ஏழை மாணவனின் உயர்கல்விக்கு

# ஐ.வி.டி.பி ரூ. 40 ஆயிரம் கல்வி உதவி

காவேரிப்பட்டிணம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயின்று, பெற்றோர் இருவரையும் இழந்த நிலையில் 508 மதிப்பெண்கள் பெற்று சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வேளாண்மை இளங்கலை பயில தேர்வு செய்யப்பட்ட M. அருண்குமார் என்ற மாணவனின் 4 வருட கல்லூரிக் கட்டணம் முழுவதையும் ஐ.வி.டி.பி. ஏற்றுக் கொண்டு முதலாம் ஆண்டு கட்டணமாக **ரூ.40 ஆயிரம்** வழங்கியது.






வாக்காளர் அட்டையில் பெயர், விலாசம், தொலை பேசி எண்கள் போன்ற
**திருத்தங்களை செய்வதற்கான பயிற்சி**
**ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.**

# விளையாட்டு வீரர்களுக்கு

# ஊக்கப்பரிசுகள்



விளையாட்டு போட்டிகளில் மாநில அளவில் நடைபெற்ற எறிபந்து போட்டிகளில் கலந்து கொண்டு இரண்டாம் பரிசு பெற்ற **புனித அன்னாள் பள்ளி மாணவிகளை பாராட்டி ரூ.20 ஆயிரம் மதிப்பிலான ஊக்கப்பரிசுகள்**



தேசிய அளவிலான **சிலம்பாட்டம் போட்டியில்** பங்கு பெற்று முதலிடம் பிடித்த **சு.கிரிபாலா** என்ற மாணவியை பாராட்டி ஐ.வி.டி.பி இயக்குனர் **ரூ. 3,500** மதிப்பிலான **1 கிராம் தங்க நாணயத்தை பரிசாக** வழங்கினார்.



காவல்துறையில் பணிபுரியும் **காவலர் யுவராஜ் விளையாட்டுப் போட்டிகளில்** பங்கேற்று பரிசு பெற்றதை பாராட்டி **ரூ.25 ஆயிரம் ஊக்கப்பரிசு.**



கனகமுட்லு, அரசு பள்ளி மாணவர்கள் **ஜுடோ போட்டிகளில்** கலந்து கொண்டு மாவட்ட அளவில் இரண்டாம் பரிசு பெற்றதை பாராட்டி **ரூ.15 ஆயிரம் மதிப்பிலான ஊக்கப்பரிசுகள்**

₹ 6 இலட்சம்

பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 6 இலட்சம் மதிப்பில்

# புத்தகப்பைகள்




அக்சீலியம் கல்லூரி, ரகுநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டம் ரகுநாதபுரம் **அக்சீலியம் கல்லூரியில்** பயிலும் 82 மாணவிகளுக்கு

**₹ 1 இலட்சம்**

மதிப்பிலான புத்தகப்பைகள்

தர்மபுரி மாவட்டம் அனுமந்தபுரம் **ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் அகாடமியில்** பயிலும் 55 மாணவர்களுக்கு

**₹ 55 ஆயிரம்**

மதிப்பிலான புத்தகப்பைகள்

ஐ.வி.டி.பி. பணியாளர்களின் குழந்தைகளுக்கு **வழங்கப்பட்ட**

**₹ 40 ஆயிரம்**

மதிப்பிலான புத்தகப்பைகள்



ஒவ்வொரு நாளும் வெற்றி பயணத்தை தொடங்கிவிட்டேன் என்று முதலடி எடுத்து வை.



ஐ.வி.டி.பி. கணினி பயிற்சி மையம், அனுமந்தபுரம்




ஐ.வி.டி.பி. பணியாளர்களின் குழந்தைகள்

**திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் பயிலும் 166 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட**

**₹ 2 இலட்சம்**

**மதிப்பிலான புத்தகப்பைகள்**

**தருமபுரி தொன்போஸ்கோ கலைக் கல்லூரியில் பயிலும் 93 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட**

**₹ 1.15 இலட்சம்**

**மதிப்பிலான புத்தகப்பைகள்**

**தருமபுரி தொன்போஸ்கோ ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பயிலும் 8 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட**

**₹ 10 ஆயிரம்**

**மதிப்பிலான புத்தகப்பைகள்**

**கிருஷ்ணகிரி கொன்சாகா கல்லூரியில் பயிலும் 80 மாணவிகளுக்கு வழங்கப்பட்ட**

**₹ 1 இலட்சம்**

**மதிப்பிலான புத்தகப்பைகள்**

₹ 12.5 இலட்சம்

மாணவர்களின் கல்வி நலனுக்காக
வழங்கப்பட்ட ரூ. 12.5 இலட்சம் மதிப்பிலான

# டெஸ்க் மற்றும் பெஞ்சுகள்




சிவகங்கை மாவட்டம், கண்டனூரில் உள்ள சிட்டாள் ஆச்சி உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் நலனுக்காக **115 டெஸ்க் மற்றும் பெஞ்சுகள்**

**₹ 7 இலட்சம்** மதிப்பில்



**₹ 1.5 இலட்சம்** மதிப்பில்

தர்மபுரியில் உள்ள அக்சீலியம் மெட்ரிக்குலேசன் துவக்கப்பள்ளியில் பயிலும் குழந்தைகளின் நலனுக்காக **மேஜை மற்றும் நாற்காலிகள்**



₹ 1.13 இலட்சம் மதிப்பில்

கிருஷ்ணகிரி ஐ.இ.எல்.சி. நடுநிலைப்பள்ளி மாணவர்களின் நலனுக்காக **20 டெஸ்க் மற்றும் பெஞ்சுகள்**

₹ 85 ஆயிரம் மதிப்பில்

தேவீர அள்ளி அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் நலனுக்காக **15 டெஸ்க் மற்றும் பெஞ்சுகள்**

₹ 2.10 இலட்சம் மதிப்பில்

தளி ஒன்றியம், தாசரப்பள்ளி நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக **டெஸ்க் மற்றும் பெஞ்சுகள்**



₹2.8 இலட்சம்

## ஆசிரியர்களின் பணியைப் பாராட்டி ரூ.2.8 இலட்சம் மதிப்பில்

# ஊக்கப்பரிசுகள்




**தர்மபுரி அக்சீலியம் மெட்ரிக் பள்ளி ஆசிரியர்களைப் பாராட்டி**
**₹ 45 ஆயிரம் மதிப்பிலான *fastrack* பைகள்**

## குழந்தைகளுக்கு ஏன் கதைகளை சொல்ல வேண்டும்...

- டிவி, கம்ப்யூட்டர், செல்போன் போன்ற மீடியாக்களின் தாக்கம் அதிகம் உள்ள இன்றைய கால கட்டத்தில், பெற்றோருடன் பேசுவது அல்லது குழந்தையோடு பெற்றோர் பேசுவது என்பதே குறைந்து வருகிறது.
- கதைசொல்வதன் மூலம், பெற்றோர் தன் குழந்தைப் பருவத்தை பற்றி பகிரவும். அதை அறிந்து, குழந்தையும் தன் குழந்தைப் பருவத்து தருணங்களை நினைத்து பெருமை கொள்ளக் கூடும்.
- குழந்தைகளுக்கு நல்ல கதைகள் சொல்வதன் மூலம், வாழ்க்கைப் பாடங்களான உதவி புரிதல், வேலை செய்தல், நேர்மையாக இருத்தல், உண்மை பேசுதல், ஏமாற்றங்கள்/தோல்வி ஏற்பட்டால் துவளாமல் இருத்தல், போராடி ஜெயிப்பது போன்ற நல்ல குணங்கள் அவர்களின் மனதில் எளிதாக விதைக்க முடியும்.
- குழந்தைகளுக்கு அடுத்தவர் பேசுவதை கேட்கும் பழக்கம் உண்டாகிறது.
- பழங்காலத்து கதைகள் மூலம் நம் நாட்டு பாரம்பரியம், ஒழுக்கம் ஆகியவற்றை கற்றுக் கொடுக்கலாம்.



கோட்டையூர்
ஐ.வி.டி.பி.
நேதாஜி பள்ளி
ஆசிரியர்களைப் பாராட்டி
**₹ 40 ஆயிரம்**
மதிப்பிலான வீட்டு
உபயோகப்
பொருட்கள்
பரிசு

எலத்தகிரி
கொன்சாகா
கல்லூரி
ஆசிரியர்களைப்
பாராட்டி
**₹ 1.2 இலட்சம்**
மதிப்பிலான
*fastrack*
பைகள்





ஒசூர்
ஜான்போஸ்கோ
மேல்நிலைப்பள்ளி
ஆசிரியர்களைப்
பாராட்டி
**₹ 75 ஆயிரம்**
மதிப்பிலான
*fastrack*
பைகள்

## பெற்றோர்களை இழந்த 435 கல்லூரி மாணவர்களுக்கு ரூ. 29 இலட்சம்

# ஐ.வி.டி.பி. கல்வி உதவித் தொகை

பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழந்த கல்லூரி மாணவர்களின் கல்வி தடைபடக் கூடாது என்பதற்காக இந்த திட்டம் கடந்த 5 வருடங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் படி பெற்றோரில் ஒருவரை இழந்த கல்லூரி மாணவர்களுக்கு ரூ.5,000, ரூ.6,000, ரூ.7,500 எனவும், இருவரையும் இழந்த கல்லூரி மாணவர்களுக்கு ரூ.10,000மும் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**₹ 29 இலட்சம்**

**இவ்வாண்டு இவ்வுதவித்தொகை திட்டத்தில் பயனடைந்த மாணவர்கள் விவரம்.**

**₹ 7 இலட்சம்**

எலத்திகிரி, கொன்சாகா கலைக் கல்லூரியில் பயிலும் 86 மாணவிகளுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை



வியர்வை துளிகளும் கண்ணீர் துளிகளும் உப்பாக இருக்கலாம்
ஆனால் அவைதான் வாழ்க்கையை இனிப்பாக மாற்றும்.



தருமபுரி தொன்போஸ்கோ ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பயிலும் 8 மாணவிகளுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை

**₹ 80 ஆயிரம்**

**₹ 4.15 இலட்சம்**

புதுக்கோட்டை, ரகுநாதபுரம் அக்சீலியம் கல்லூரியில் பயிலும் 82 மாணவிகளுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை

தருமபுரி தொன்போஸ்கோ கலைக் கல்லூரியில் பயிலும் 93 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை

**₹ 5.75 இலட்சம்**

**₹ 10 இலட்சம்**

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் பயிலும் 166 மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித் தொகை



# பள்ளிகளுக்கு ரூ. 2 இலட்சம் மதிப்பிலான கணினி, ஸ்மார்ட் போர்ட் வகுப்பறை மற்றும் UPS பேட்டரிகள்

₹ 2 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனத்தின் கல்வி சேவைகளுள் கணினிக் கல்வியை மேம்படுத்த உதவும் கணினிகள், கணினி ஆய்வகங்கள், ஸ்மார்ட் போர்ட் வகுப்பறை மற்றும் UPS பேட்டரி ஆகியவை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக கடந்த 3 மாதங்களில்...








**₹ 30,000** மதிப்பில் — கிருஷ்ணகிரி அணை அரசு மேல்நிலைப்பள்ளிக்கு **கணினி**

**₹ 27,000** மதிப்பில் — கொரல்நத்தம் அரசு பள்ளிக்கு **UPS, பேட்டரி**

**₹ 65,000** மதிப்பில் — தர்மபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு **ஸ்மார்ட் போர்ட் வகுப்பறை**

**₹ 80,000** மதிப்பில் — தர்மபுரி மாவட்டம், கடகத்தூர் பாத்திமா உதவி பெறும் நடுநிலைப் பள்ளிக்கு **ஸ்மார்ட் போர்ட் வகுப்பறை**



பேசிக்கொண்டே இருக்காதீர்கள். வெகுசீக்கரமே வெறுக்கப்படுகிறார்கள்.
மௌனமாக காத்திருங்கள் அதிகமாக தேடப்படுகிறார்கள்.

# ஐ.வி.டி.பி. நிறுவனர் கலந்து கொண்ட விழாக்கள்



நாச்சிக்குப்பம், தீர்த்தம் ஆகிய இடங்களில் ஐ.வி.டி.பி.யின் 72வது மற்றும் 73வது கிளை துவக்க விழா




ஓய்வுபெற்ற வருவாய் துறையினர் ஒன்று கூடல் நிகழ்ச்சியின் போது



சேலம் மெட்டலா, லொயோலா கல்லூரி விழா



சுரண்டை, மகாத்மா பள்ளிக்கு சென்ற போது



குறும்பட அறிமுக விழாவில் சேலம் ஆயர் மேதகு. செ. சிங்கராயன் அவர்களோடு

எதையும் எதிர்கொள்வேன் என்ற மனநிலை மட்டுமே,
நம்பிக்கையை கொடுக்கும்.

# ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகத்திற்கு வருகை புரிந்த விருந்தினர்கள்



பாங்க் ஆப் இந்தியா,
துணை மண்டல மேலாளர்
திரு. S. பிச்சை ரத்தினம் அவர்கள்
ஐ.வி.டி.பி.க்கு வருகை



இந்தியன் வங்கியின் பொது மேலாளர்
திரு. தேவராஜ் அவர்கள்
ஐ.வி.டி.பி.க்கு வருகை



தருமபுரி தொன்போஸ்கோ கல்லூரி சமூப்பணி முதுகலை மாணவர்கள்
ஐ.வி.டி.பி.க்கு வருகை



ஏமாற்றுவதை காட்டிலும் தோற்றுப்போவது மரியாதைக்குரியது.

# ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகத்திற்கு வருகை புரிந்த விருந்தினர்கள்

LG விருது



மடகாஸ்கர் நாட்டிலிருந்து விருந்தினர் வருகை



நேரு இளைஞர் மைய குழுவினர் வருகை



# ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம்














# தாய்லாந்து நாட்டிற்கு பயணம்
















# தலைமை அலுவலகத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள்



பணியாளர்களுக்கான தீபாவளி பரிசுகள்

விநாயகர் சதுர்த்தி விழா





ஆயுத பூஜை விழா



ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளியின் கலையரங்க பூமி பூஜை விழா



இழந்த அனைத்தையும் மீட்டுவிடலாம் நம்பிக்கையை இழக்காதிருந்தால்.

# ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் கவனத்திற்கு

**குழுக்களை தர நிலைப்படுத்தும் வழிமுறையில் இவ்வாண்டு**
**''வெண்கலக்குழு'', ''வெள்ளிக்குழு'', ''தங்கக்குழு'', ''வைரக்குழு''**
**என 4 தரநிலைகள் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

| தரம் | குழுக்களை தர நிலைப்படுத்தும் வழிமுறைகள் | வங்கி கடன் தொகை |
|---|---|---|
| BRONZE GROUP (வெண்கலக் குழு) | 5 ஆண்டுகளாக இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் கட்டாயமாக 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab-ல் கைரேகை பதிவு செய்திருத்தல், கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலில் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல் | ₹ 50,000 வரை |
| SILVER GROUP (வெள்ளிக் குழு) | 5 ஆண்டுகளிலிருந்து 7 வருடங்கள் வரை இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் கட்டாயமாக 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab-ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குநர் A★தர நிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ 60,000 வரை |
| GOLD GROUP (தங்கக் குழு) | 7 ஆண்டுகளிலிருந்து 10 வருடங்கள் வரை இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் கட்டாயமாக 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab-ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குநர் A★தர நிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ 75,000 வரை |
| DIAMOND GROUP (வைரக் குழு) | 10 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கும் குழுக்கள் – குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் கட்டாயமாக 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab-ல் கைரேகை பதிவு செய்திருத்தல், ஊக்குநர் A★தர நிலையை பெற்றிருத்தல் மற்றும் சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் | ₹ 1,00,000 வரை |

செயல்படாத குழு : **(D)** இக்குழுக்கள் எவ்வகை கடன்களும் பெற தகுதியற்ற குழுக்கள்

| தரம் | ஊக்குநர்களை தர நிலைப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|
| A | குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் கட்டாயமாக 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலில் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல். |
| A★ | குழுவின் அனைத்து உறுப்பினர்களும் வருடத்தில் குறைந்தபட்சம் கட்டாயமாக 6 குழுக்கூட்டங்களிலாவது 100% வருகை புரிந்து Tab–ல் கைரேகை பதிவு செய்திருத்தல், கடன் பெறுதல், திருப்பி செலுத்துதலில் சிறப்பான செயல்பாடுகளை கொண்டிருத்தல், சுகாதார திட்டங்களில் சிறப்பான செயல்பாடுகள் மற்றும் குழுவின் அனைத்து பதிவேடுகளையும் ஊக்குநர் அல்லது குழு உறுப்பினர்களே முறையாக பராமரித்தல் |

# ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் கவனத்திற்கு

## சங்கக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | சங்க கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது |
|---|---|---|
| ரூ. 50,000 லிருந்து<br>ரூ. 1,00,000 வரை | ரூ. 40,000 வரை | 5 வருடத்திற்கு மேல் |
| ரூ. 1,25,000 வரை | ரூ. 50,000 வரை | 8 லிருந்து 10 வருடத்திற்கு மேல் |
| ரூ. 1,50,000 வரை | ரூ. 50,000 வரை | 10 வருடத்திற்கு மேல் |

## சிறப்புக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | சிறப்பு கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது | உறுப்பினரின் மொத்த கடன் தொகை |
|---|---|---|---|
| ரூ. 25,000 | ரூ. 25,000 வரை | 2 வருடத்திற்கு மேல்<br>5 வருடம் வரை | ரூ. 60,000 வரை |
| ரூ. 50,000 லிருந்து<br>ரூ. 1,00,000 வரை | ரூ. 30,000 வரை | 5 வருடத்திற்கு மேல்<br>10 வருடம் வரை | ரூ. 60,000 வரை |
| ரூ. 1, 25,000 வரை | ரூ. 30,000 வரை | 8 to 10 வருடத்திற்கு மேல் | ரூ. 70,000 வரை |
| ரூ. 1,50,000 வரை | ரூ. 40,000 வரை | 10 வருடத்திற்கு மேல் | ரூ. 80,000 வரை |

## வங்கிக் கடன் வழங்குவதில் பின்பற்றப்படும் நடைமுறைகள்

| குழுவின் டெபாசிட் | வங்கி கடன் பெறும் தொகை (மற்ற கடன்களை பொறுத்து மாறுபடும்) | குழுவின் வயது | உறுப்பினரின் மொத்த கடன் தொகை |
|---|---|---|---|
| முதல் வருடத்தில் | ரூ. 10,000 வரை<br>ரூ. 20,000 வரை | 1 வருடத்திலிருந்து<br>2 வருடம் வரை | --- |
| ரூ. 25000 லிருந்து | ரூ. 40,000 வரை | 2 வருடத்திலிருந்து<br>4 வருடம் வரை | ரூ. 60,000 வரை |
| ரூ. 50,000 லிருந்து<br>ரூ. 1,00,000 வரை | ரூ. 50,000 வரை | 4 வருடத்திலிருந்து<br>10 வருடம் வரை | ரூ. 80,000 வரை |
| ரூ. 1,25,000 மட்டும் | ரூ. 50,000 வரை | 10 வருடத்திற்கு மேல்<br>"தங்கக்குழு" பெற்றிருந்தால் | ரூ. 90,000 வரை<br>ரூ. 1,00,000 வரை |
| ரூ. 1,50,000 மட்டும் | ரூ. 50,000 வரை | 10 வருடத்திற்கு மேல்<br>"வைரக்குழு" பெற்றிருந்தால் | ரூ. 1,00,000 வரை<br>ரூ. 1,20,000 வரை |
| ரூ. 1,00,000 லிருந்து<br>ரூ. 1,50,000 வரை | ரூ. 60,000 வரை | 5 to 7 வருடத்திற்கு மேல், 2 முறை இலாப பங்கீடு பெற்று "வெள்ளிக்குழு"விற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும். | |
| ரூ. 1,00,000 லிருந்து<br>ரூ. 1,50,000 வரை | ரூ. 75,000 வரை | 7 to 10 வருடத்திற்கு மேல், 2 முறைக்குமேல் இலாப பங்கீடு பெற்று "தங்கக்குழு"விற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும். | |
| ரூ. 1,00,000 லிருந்து<br>ரூ. 1,50,000 வரை | ரூ. 1,00,000 வரை | 10 வருடத்திற்கு மேல், 2 முறைக்குமேல் இலாப பங்கீடு பெற்று "வைரக்குழு"விற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும். | |



இழந்த அனைத்தையும் மீட்டுவிடலாம் நம்பிக்கையை இழக்காதிருந்தால்.

# ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் கவனத்திற்கு

## ஐ.வி.டி.பி நிறுவனத்தின் மூலம் பெறப்படும் பொருட்களை பாதுகாப்பது குறித்த வழிமுறைகள்

**(பொருட்களை 30 நாட்களுக்குள் பயன்படுத்த துவங்க வேண்டும்)**

➔ டிவி, RO போன்றவற்றை பொருத்துவதற்கும், ஏதாவது பிரச்சினை என்றாலும் **04343-232129, 236420** என்ற எண்ணிற்கு பொருளை எடுத்து வந்த உடன், யார் வீட்டில் பொருள் உள்ளதோ அவர்களது மொபைல் எண்ணில் இருந்து தொடர்பு கொள்ளவும்.

### பிரிட்ஜ்

➔ பிரிட்ஜ்–யை சாய்த்து தூக்கக் கூடாது. பிரிட்ஜ் வீட்டிற்கு வந்தவுடன் உடனே அதை **ON** செய்யக்கூடாது. ஏனென்றால் அது இரண்டு, மூன்று வகையான **Transport**-முறையில் நமது வீட்டிற்கு வருகிறது. சரியான இடத்தில் வைத்து இரண்டு நாட்கள் கழித்து **ON** செய்ய வேண்டும். அதற்குள் பிரிட்ஜில் இருக்கும் **Gas** செட்டில் ஆகி இருக்கும்.

➔ மேலும் சுவற்றில் **Plug Point** இருக்குமாறும், **Earth** சரியான முறையில் உள்ளதா என்பதையும் எலக்ட்ரிசியன் மூலம் **Check** செய்து பிரிட்ஜ்–ஐ வைக்க வேண்டும். **Junction Box** வைத்து பிரிட்ஜ்–ஐ **Connect** செய்யக் கூடாது.

➔ பிரிட்ஜில்–ல் உள்ள **Freezer Box**–ல் ஐஸ் கட்டியாக இருந்தால் உள்ளே இருக்கும் ஒரு ஸ்விட்சை **Off** செய்தால் ஐஸ் கட்டி உருகி வெளியேறிவிடும். இல்லாவிட்டால் பிரிட்ஜ்–யை **Off** செய்யலாம். ஆனால் கத்தி மூலமாகவோ, கரண்டி மூலமாகவோ ஐஸ் கட்டியை உடைக்க முற்பட்டால் **Freezer Box**–ல் உள்ள சிறிய **Tube** உடைந்து விடும். பிறகு **ரூ. 5,000** செலவு செய்தால் மட்டுமே சரிசெய்ய இயலும்.

### LED TV

➔ **LED TV வாங்கியவுடன் அவசரமாக Open செய்யக்கூடாது. சர்வீஸ் மேன் வந்தவுடனே Open செய்ய வேண்டும். சர்வீஸ் மேன் Open செய்தால் டிவி உடைந்து இருந்தால் கூட உடனே இலவசமாக மாற்றி தருவார்கள். நாம் Open செய்து உடைந்து உள்ளது என்று கூறினால் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.**

➔ **LED TV-யை அதற்காக உள்ள Bracket மூலம் சுவற்றில் பொருத்த வேண்டும். ஜன்னல், டேபிள், ஷோகேஸ் ஆகியவற்றில் வைத்தால் கைபட்டாலோ அல்லது அதிக காற்றினால் கூட கீழே விழுந்து உடைந்து விடக்கூடும்.**

➔ **குழந்தைகள் விளையாடும்போது பந்து, பலூன், சீப்பு, பென்சில் ஆகியவற்றை டிவி-யில் படாமல் பார்த்துக் கொள்ளவும். சிறு கீறல் ஆனால் கூட Panel உடைந்து விடும். சரிசெய்ய ரூ. 9,000 முதல் ரூ. 12,000 வரை ஆகும். 1 வருட வாரண்டியில் உடைந்த பொருள்களை சரி செய்ய இயலாது.**

➔ **டிவி-யை தண்ணீர் வைத்து துடைக்கக் கூடாது. மெதுவான, பஞ்சு போன்ற துணியில் மட்டுமே துடைக்க வேண்டும்.**

➔ **டிவியில் கேபிள் கனெக்சன் கொடுக்கும் போது சில நேரங்களில் Reverse Current Pass ஆகி உள்ளே உள்ள போர்ட் Damage-ஆக வாய்ப்பு உள்ளது. அதனால் Isolator என்ற உபகரணத்தை பொருத்திக் கொள்ளவும். அதன் விலை அதிக பட்சம் ரூ. 500 ஆக இருக்கும். இது கடைகளில் கிடைக்கும்.**

# ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் கவனத்திற்கு

## சோலார் விளக்கு

- சோலார் Lamp-ஐ முதல் முறை உபயோகப்படுத்தும் முன்பு ஒருநாள் முழுவதும் Charge-ல் போட்டு பயன்படுத்த வேண்டும். பயன்படுத்திய பிறகு இரண்டு நாளைக்கு ஒருமுறை முழுவதுமாக Charge போட வேண்டும்.
- சோலார் Lamp-ல் Charge குறைவாக இருந்தால் மட்டுமே எரியாமல் போகும். அதனால் ஒருநாள் முழுவதும் Charge செய்தும் எரியவில்லை என்றால் மட்டும் கிளை அலுவலகத்தில் பொருளை கொடுக்கவும்.
- 15 நாளைக்கு ஒருமுற சர்விஸ் மேன் கிளை அலுவலகம் வந்து சரிசெய்து கொடுப்பார்கள். ஒரு வாரத்தில் வந்து எடுத்துக் கொள்ளலாம். ஒரு மாதத்திற்கு மேல் கிளை அலுவலகத்தில் Solar Lamp சரி செய்யப்படவில்லை என்றால் தலைமை அலுவலகத்திற்கு தகவல் கொடுக்கவும்.
- அவசரமான, அவசியமான நேரத்தில் மட்டும் போனுக்கு Charge போட Lamp-ஐ பயன்படுத்தவும்.
- Charger Pin-ஐ பொருத்தும் போதும், நீக்கும் போதும் கவனமாக பார்த்து செய்யவும். Pin உடைந்து விடும் சூழ்நிலையும், உள்ளே தங்கி விடும் சூழ்நிலையும் ஏற்படும்.
- சோலார் Fan பொருத்துவதில் சிரமம் இருந்தால் பொருத்த வேண்டாம். உடனே தலைமை அலுவலகத்திற்கு தகவல் கொடுக்கவும். சர்வீஸ் மேன் வந்து பொருத்திக் கொடுப்பார்கள்.

**SF40 Fan**

அதிக பட்ச விலை ~~₹ 5495~~

ஐ.வி.டி.பி. விலை

**₹ 3750**




**S670 Light**

அதிக பட்ச விலை ~~₹ 2795~~

ஐ.வி.டி.பி. விலை **₹ 2195**



# ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் கவனத்திற்கு

## வாசிங் மெஷின்

- வாசிங் மெஷினை சம தரையில் வைக்க வேண்டும். ஏற்ற இறக்கங்கள் உள்ள தரையில் வைக்கக்கூடாது.

## RO MACHINE

- RO வாங்கும் போது வீட்டில் Tank வசதி உள்ளதா என்பதை பார்க்கவும். Tank வசதி இல்லையென்றால் Pump மூலம் பொருத்தும் வசதி உள்ளது.
- RO-ஐ Tank-ல் தண்ணீர் இல்லாமல் இயக்கினால் Membrane, Pump ஆகியவை பழுதாக வாய்ப்பு உள்ளது.
- RO -ல் Blue Colour-ல் Light-எரிந்தால் Sediment Filter மாற்ற வேண்டும்.
- RO-ல் Colour Indicator Light-எரிந்தால் பேட்டரி மாற்ற வேண்டும்.
- Warranty Time-ஆக இருந்தாலும் பேட்டரியை பணம் கொடுத்து தான் மாற்றிக் கொள்ள வேண்டும்.
- பேட்டரியை Loan மூலம் பெற்று தவணை முறையில் திருப்பி செலுத்தலாம்.

| RO | விலை | பேட்டரி | நிலை | விலை |
|---|---|---|---|---|
| Nitro - Marvello RO மற்றும் Classic RO | ₹ 16,452 | GKK 1 | 4000 லிட்டருக்கு பிறகு | ~~₹ 2,500~~ (IVDP ₹ 2,350) |
| | | GKK 2 | மாற்றியதில் இருந்து 4000 லிட்டருக்கு பிறகு | ~~₹ 3,500~~ (IVDP ₹ 3,250) |
| Mineral RO | ₹ 11,830 | GKK | 6000 லிட்டருக்கு பிறகு | ~~₹ 2,650~~ (IVDP ₹ 2,500) |
| Pureit Battery | | | | ₹ 950 |




இந்தியன் வங்கி சுய வேலைவாய்ப்பு தையற்பயிற்சியில் பங்கேற்று சிறப்பிடம் பெற்ற

**6 மகளிருக்கு ரூ. 20,000 மதிப்பில் தங்க நாணயம் பரிசு**

## ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு

# தையல் இயந்திரக் கடன்

**ஐ.வி.டி.பி. மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு தையல் இயந்திரங்கள் கடனாக வழங்கப்படுகின்றன. அவ்வாறு கடன் பெற விரும்பும் உறுப்பினர்கள் கீழ்க்கண்ட தையல் இயந்திரங்களில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்யலாம்.**




*Tailor - Delux*

**₹ 5,400**




*RSM - Rotary Stitch Machine*

**₹ 9,240**




*QSM (Quick Stitch Machine)*

**₹ 9,470**




*High Speed Power Machine*

**₹ 17,500**



தோசைய நின்னுக்கிட்டே ஊத்தணும்... ஆனா கால் வலிக்கும்...
இட்லிய ஊத்திட்டு உட்கார்த்துக்கலாம்... ஆனா நிறைய பாத்திரம் கழவணும்... துன்பம் எதில்தான் இல்ல...?

ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு

# ஸ்மார்ட் போன் கடன்

LG Smartphone

## LG W30



அதிக பட்ச விலை
₹ ~~11,000~~
ஐ.வி.டி.பி. விலை
**₹ 9,000**
முன்பணம் ரூ. 500
மாதத் தவணை
ரூ. 500

### வழிமுறைகள்

- முதன் முறை Open செய்யும் போது ஐ.வி.டி.பி. நிறுவனத்திலோ அல்லது சர்வீஸ் சென்டரிலோ Open செய்யவும்
- அவ்வாறு செய்தால் ஏதாவது பிரச்சனை இருந்தால் உடனே மாற்றி தருவார்கள்.
- முதன் முறையில் 8 மணி நேரம் சார்ஜ் செய்ய வேண்டும்.
- போனை கீழே போட்டு உடைந்தாலோ, தண்ணீரில் போட்டாலோ வாரண்டியில் கவர் ஆகாது.
- தவறான உபயோகப்படுத்தும் முறையால் மீண்டும் மீண்டும் Complaint வந்தால் சர்வீஸ் சார்ஜ் வசூலிக்கப்படும்.

**Processor & Storage**
2.0 GHz Octa-Core
3GB / 32GB

**Camera**
Front : 16MP
Rear : Triple Rear Camera
12MP AF (Low Light)
13MP AF (Wide)
2MP FF (Depth Camera)

**Display**
15.9cm (6.26), 19:9 HD+
IPS U-Drop, FullVisionTM

**Battery**
4,000mAh / Li-polymer

**Fingerprint Sensor**
Fast Fingerprint Unlock

**AI**
Face-unlock
Bokeh Effect

### சர்வீஸ் சென்டர்

**கூல் ப்ரீஸ் எலக்ட்ரானிக்ஸ்**
2/522-C, இந்திரா நகர், கோர்ட் அருகில்
கிருஷ்ணகிரி - 635 001.
செல் : **93629-54321, 04343-225321**

**விஷ்வெஸ் மொபைல்ஸ்**
262-A, அத்வைத ஆஸ்ரமம் ரோடு,
புதிய பேருந்து நிலையம், சேலம் - 635 004.
செல் : **9362093629**

## மார்ச் 2019லிருந்து நவம்பர் 2019 வரையிலான ஐ.வி.டி.பி. குழுக்களின் விபரம்

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர்.
ஐ.வி.டி.பி. கிளை அலுவலகங்கள் : 73

| விவரம் | மார்ச் 2019 வரை | ஏப்ரல் 2019 – நவம்பர் 2019 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி.-யில் உள்ள மொத்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் | 13352 | 217 | 13569 |
| மொத்த சுய உதவிக்குழு உறுப்பினர்கள் | 241092 | 3041 | 244133 |
| ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு | ₹ 660 கோடி | ₹ 74 கோடி | ₹ 734 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற இலாபப்பங்கீடு | ₹ 521 கோடி | - | ₹ 521 கோடி |

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2019 வரை | ஏப்ரல் 2019 – நவம்பர் 2019 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 3346 கோடி | ₹ 324 கோடி | ₹ 3670 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்க கடன் தொகை | ₹ 3109.50 கோடி | ₹ 215.50 கோடி | ₹ 3325 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ₹ 156.58 கோடி | ₹ 16.42 கோடி | ₹ 173 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத்திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ₹ 170.50 கோடி | ₹ 7.50 கோடி | ₹ 178 கோடி |
| மொத்த கடன் சுழற்சி | ₹ 6782.58 கோடி | ₹ 563.42 கோடி | ₹ 7346 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி. (நவம்பர் 2019 வரை)

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ₹ 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ₹ 2.00 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கை பாதுகாப்பு நிதி உதவி | ₹ 27.35 கோடி |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கேரள வெள்ளம், கஜா புயல், நீலகிரி மாவட்ட வெள்ளம் போன்ற பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக | ₹ 4.75 கோடி |
| உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குடிசை தீ விபத்து நிதி, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தின பரிசுகள் | ₹ 0.50 கோடி |
| மருத்துவமனை, சிறைகள், குழந்தைகள் மற்றும் முதியோர் இல்லம், ஏழைகளுக்கு வீடு கட்டும் திட்டம், கடைநிலை பணியாளர்களுக்கு நிலைவைப்பு | ₹ 2.01 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை மற்றும் இதர கல்வி பணிகளுக்காக | ₹ 24.70 கோடி |
| ஊக்குனர்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை | ₹ 6.00 கோடி |
| **கடந்த 41 ஆண்டுகளில் மனித நேயப் பணிகளுக்காக ஐ.வி.டி.பி. வழங்கிய தொகை** | **₹ 72.31 கோடி** |

40 IVDP 1979 2019

# ஐ.வி.டி.பி. தன்னார்வ தொண்டு நிறுவனம்

ஐ.வி.டி.பி. இல்லம்,
9இ, சாந்தி நகர் 3வது கிராஸ்,
கிருஷ்ணகிரி-635 001,

04343-232 129, 236 420
francis@ivdpkrishnagiri.org
www.ivdpkrishnagiri.org